

# அத்தியாயம் - 4

***சீர்டிக்கு ஸாயிபாபாவின் முதல் விஜயம் - ஞானிகளின் வருகை - சீர்டி ஒரு புண்ணிய தீர்த்தம் - ஸாயிபாபாவின் தோற்றம் - கௌலிபுவாவின் கருத்து - விட்டலின் பிரசன்னம் - க்ஷீர்ஸாகரின் கதை - பிரயாகையில் தாஸ்கணுவின் குளியல் - ஸாயிபாபாவின் அயோனி ஜன்மமும் அவரின் முதல் சீர்டி விஜயமும் - மூன்று சத்திரங்கள்.***

✦ ✧ ✦

முந்தைய அத்தியாயத்தில், 'ஸாயி ஸத் சரித்திரத்தை' எழுதத் தூண்டிய சூழ்நிலைகளை விவரித்தேன். இப்போது சீர்டிக்கு ஸாயி பாபாவின் முதல் விஜயம் பற்றிக் கூறுகிறேன்.

**ஞானிகளின் வருகை**

கீதையில் கண்ணபிரான் கூறுகிறார் (அத் IV 7-8) "தர்மம் அழிந்து அதர்மம் தலையெடுக்கும் போதெல்லாம் என்னை நானே அவதரித்துக் கொள்கிறேன். நல்லோரைக் காத்துத் தீயோரை அழிக்க யுகந்தோறும் அவதரிக்கின்றேன்.

இதுவே பகவானின் அவதார நோக்கம். பகவானின் சார்பாக ரிஷிகளும், ஞானிகளும், இப்பூவுலகில், தக்க தருணத்தில் தோன்றி, அவதார நோக்கம் நிறைவேறுமுகமாகத் தமக்கே உரித்தான முறையில் உதவி செய்கிறார்கள். உதாரணமாக இருமுறை பிறப்பவர் அதாவது பிராமணர்கள், க்ஷத்திரியர்கள், வைசியர்கள், தங்கள் கடமைகளைப் புறக் கணிக்கும்போதும், மேற்குலத்தவரின் உரிமைகளைத் தவறான முறையில் பறிக்கச் சூத்திரர்கள் முயலும் போதும், ஆன்மஞான போதகர்கள் மதிக்கப்படாமல் அவமதிக்கப்படும்போதும் தன்னைத் தான் (ஒவ்வொருவனும்) மெத்தப்படித்தவன் என்று எண்ணும்போதும், தடுக்கப்பட்ட ஆகாராதிகளையும், போதை தரும் குடிப்பொருளையும் ஜனங்கள் உட்கொள்ளும் பொழுதும், மதமென்னும் போர்வையினுள் மக்கள்

தகாத காரியங்களைச் செய்யும் போதும், பல்வேறு இனத்து மக்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்ளும் போதும், மறையவர் சந்தியாவந்தனம், மற்றும் தங்கள் மதப் பழக்க வழக்கங்களைச் செய்யத் தவறும் போதும், யோகிகள் தியானத்தைப் புறக்கணிக்கும் போதும், மனைவி, மக்கள் செல்வமே, தங்கள் கருத்துக்குரிய ஒன்றே ஒன்று என்று மக்கள் கருதத் தலைப்பட்டு முக்தி என்னும் உண்மை நெறியினின்று வழி தவறிப்போகும் பொழுதும், ஞானிகள் தோன்றவே செய்கிறார்கள். தங்கள் மொழி, செயல் வழிகளால் காரியங்களை நெறிப்படுத்துகிறார்கள். அவர்கள் கலங்கரை விளக்கையொப்ப சேவை செய்து நமக்கு மெய்நெறியைக் காண்பிக்கிறார்கள். இவ்வாறாகப் பல ஞானிகள் நிவ்ருத்தி, ஞானதேவ், முக்தாபாய், நாமதேவ், கோரா, கோனாயி, ஏகநாத், துக்காராம், நரஹரி, நர்ஸிபாயி, ஸஜன்கஸாயி, ஸவதா, ராமதாஸ் மற்றும் பலர் பற்பல காலங்களில் மக்களுக்கு மெய் நெறியைக் காண்பிக்கத் தோன்றவே செய்தனர். இவ்வகையில் இறுதியாக சீர்டி ஸாயிபாபாவும் விஜயம் செய்தார்.

***சீர்டி ஒரு புண்ணிய தீர்த்தம்***

அஹமத்நகர ஜில்லாவில் உள்ள கோதாவரி ஆற்றங்கரை மிகவும் அதிருஷ்டம் படைத்ததாகும். ஏனெனில் அனேக ஞானிகளை ஈன்று புரந்தும், அடைக்கலம் கொடுத்தும் இருக்கிறது. அவர்களுள் முக்கியமானவர் ஞானேச்வர், சீர்டியும், அஹமத்நகர ஜில்லாவில் உள்ள கோபர்காங்வ் தாலுக்கா வில்தான் இருக்கிறது. கோபார்காங்வில் உள்ள கோதாவரி ஆற்றைக் கடந்தவுடன் நீங்கள் சீர்டிக்குள்ள வழியை அடைகிறீர்கள். ஒன்பது மைல்கள் சென்றதும் நிம்காங்வ் அடைகிறீர்கள். அவ்விடத்தினின்று சீர்டி தெரிகிறது. கிருஷ்ணா ஆற்றங்கரையிலுள்ள கங்காபூர், நரஸிம்ஹவாடி, ஔதும்பர் போன்ற மற்ற புனித க்ஷேத்திரங்களைப் போன்று சீர்டியும் அறிமுகமானதும் புகழ் பெற்றதும் ஆகும். தாமாஜி செழித்து விளங்கியதும், ஆசீர்வதித்ததுமான பண்டரீபுரத்துக்கு அருகில் உள்ள மங்கல் வேடாவைப் போன்றும் ஸமர்த்த ராம்தாஸ் ஸஜ்ஜன்கட்டில் விளங்கியதைப் போன்றும் நரஸிம்ஹ ஸரஸ்வதி நரோபாச்சிவாடியில் விளங்கியதைப் போன்றும், ஸாயீநாத் சீர்டியில் செழித்து விளங்கி அஃதை வாழ்த்தினார்.

### ஸாயிபாபாவின் ஸத்வ குணரூபம்

ஸாயிபாபாவினால் சீர்டி முக்கியத்துவம் பெற்றது. ஸாயிபாபா எத்தகைய பண்புள்ளவர் என்பதைக் காண்போம்.

கடப்பதற்கு மிகவும் கடினமான இகவாழ்வை அவர் வென்றார். சாந்தி அல்லது மன அமைதியே அவரின் அணிகலன். விவேகத்தின் பெட்டகம். அவர் வைணவ அடியார்களின் தாயகமாவார். அவர் கர்ணனையொப்ப வள்ளல் களுள் எல்லாம் தலை சிறந்த வள்ளலாக விளங்கினார். சாராம்சம் அனைத்தினின்றும் பெற்ற சாராம்சமாகவும் இருந்தார். அவருக்கு அழியும் பொருள்கள் மீது ஆசை இல்லை. அவருடைய ஒரே ஈடுபாடான ஆன்ம உணர்விலேயே எப்போதும் கவரப்பட்டார். இவ்வுலகப் பொருள்களிலோ அல்லது இவ்வுலகத்தைக் கடந்தவற்றிலோ அவர் மகிழ்ச்சி யடையவில்லை. அவரின் அந்தரங்கம் (உள்ளம்) ஒரு கண்ணாடி போன்று தூய்மையானது. அவரின் மொழிகள் எப்போதும் அமுதத்தைப் பெய்தன. பணக்காரர், ஏழை யாவரும் அவருக்கு ஒன்றே. புகழ்ச்சி, இகழ்ச்சி இவற்றை அவர் அறிந்திருக்கவில்லை அல்லது மதிக்கவில்லை. அவரே எல்லா உயிர்கட்கும் இறைவன் ஆவார். அவர் சரளமாகப் பேசி அனைவருடனும் பழகினார். நடிப்பையே தொழிலாகக் கொண்ட குமரிகளின் நடிப்பையும் நாட்டியத்தையும் கண்டார். கஜல் பாடல்களைக் (தெம்மாங்கு) கேட்டார். ஆயினும் இம்மியளவும் சமாதி நிலையிலிருந்து அவர் விலகவில்லை. அல்லாவின் நாமம் எப்போதும் அவர் நாவில் இருந்தது. இவ்வுலகம் விழித்திருக்கும் போது அவர் தூங்கினார். இவ்வுலகம் தூங்கும் போது அவர் சுறுசுறுப்பாய் இருந்தார். ஆழ்ந்த கடலையொப்ப அவர் மனம் அமைதியாய் இருந்தது. அவரது இருப்பிடத்தைத் தீர்மானிக்க இயலாததாய் இருந்தது. மற்றும் அவர் செய்கைகள் நிச்சயமாகத் தீர்க்கப்பட இயலாததாய் இருந்தது. அவர் ஓரிடத்தில் வாழ்ந்தார். எனினும் இவ்வுலகின் நடவடிக்கைகள் அனைத்தையும் அவர் அறிவார். அவரின் தர்பார் கவர்ச்சிகரமானது. தினந்தோறும் நூற்றுக்கணக்கான கதை களைத் திருவாய் மலர்ந்தார். ஆனாலும் மௌன விரதத் திலிருந்து இம்மியளவும் பிறழவில்லை. மசூதியில் உள்ள சுவரின் மீது அவர் எப்போதும் சாய்ந்து கொண்டிருந்தார். அல்லது காலை, மதியம், மாலை இவற்றில் லெண்டி (தோட்டம்),

சாவடி (சயன அறை) இவற்றை நோக்கி நடந்து கொண்டிருந்தார். ஆயினும் எப்போதும் ஆன்ம உணர்வில் கருத்துள்ளவராகவே இருப்பார். சித்தராயினும் சாதகரைப் போன்று நடித்தார். அவர் எளிமையாகவும், தாழ்வாகவும் அகங்காரமற்றும் இருந்து எல்லோரையும் மகிழ்வித்தார். இவரே ஸாயிபாபா. சீர்டி மண் ஸாயிபாபாவின் திருவடிகளால் மிதிபட்டதால், அசாதாரண முக்கியத்துவம் பெற்றது. ஆலந்தியை ஞானேச்வரும் பைடாணை ஏகநாதரும் உயர்த்தியதையொப்ப சீர்டியைச் ஸாயி உயர்த்தினார்.

சீர்டியின் புல்லின் அரும்புகளும், கற்களும் ஆசீர் வதிக்கப்பட்டவைகள். ஏனெனில், அவைகள் எளிதாக ஸாயியின் திருவடிகளை முத்தமிட முடியும். திருவடித் தூளிகளை தமது தலையில் ஏற்றுக் கொள்ள முடியும். நமது அடியவர்களுக்கு சீர்டி மற்றும் ஒரு பண்டரீபுரம், ஜகந்நாதம், துவாரகை, காசி, ராமேச்வரம், பத்ரி, கேதாரம், நாசிக், திரியம்பகேச்வரம், உஜ்ஜயினி, மஹாகாலீச்வரர் அல்லது மஹாபலீச்வர கோகர்ணம் போன்று ஆகியது. சீர்டியில் ஸாயிபாபாவுடன் தொடர்பு கொள்வதே நமது வேதமும், தந்திரமும், அஃது இவ்வுலக உணர்வைத் தணித்து, தன்னுணர்வை எளிதில் வழங்குகிறது. ஸாயிபாபாவின் தரிசனமே நமது யோகசாதனம். அவருடன் பேசுவது நமது பாவங்களைக் கழித்துறச் செய்யும். அவரின் திருவடிகளுக்கு நறுமண எண்ணெய் தேய்ப்பதே நமது திரிவேணிப் பிரயாகை நீராடல், அவரின் திருவடித் தீர்த்தத்தை அருந்துவதனால் நமது ஆசைகள் அற்றுவிடும். அவரின் ஆணையே வேதம். அவர் 'உதி' (திருநீற்றுச்சாம்பல்)யையும் பிரஸாதத்தையும் உண்ணலே எல்லாவற்றையும் தூய்மை ஆக்கும். நமக்கு ஆறுதல் அளித்த அவரே நமது கிருஷ்ணர், ராமர், அவரே நமது பரப்பிரம்மம் (பரிபூரணத்துவம்). அவர் தாமே மாறுபட்ட இருவினைகளுக்கு அப்பாற்பட்டவராய் தாழ்த்தப்படாமலும், உயர்த்தப்படாமலும் இருந்தார். அவர் எப்போதும் ஆன்மத்தில் ஸத் - சித்து - ஆனந்தமாகக் கவரப் பட்டார். அவரின் இருப்பிடம் சீர்டியானாலும், அவரின் செயல் இலக்குகள் பரந்து பஞ்சாப், கல்கத்தா, வட இந்தியா, குஜராத், தக்காணம், கன்னடம் ஆகியவரைக்கும் விரிந்திருந்தது. இவ்வாறாகத் திக்கெட்டும் நெடுந்தூரம் ஸாயியின் புகழ் பரவி எல்லாப் பகுதிகளிலிருந்தும் அடியவர் திருக்கூட்டம்

அவரின் தரிசனத்தையும் ஆசீர்வாதத்தையும் பெறுவதற்காக வந்தது. அவருடைய தரிசனம் ஒன்றினாலேயே மக்களின் மனம் சுத்தமாக இருப்பினும், இல்லாவிட்டாலும் கணத்தில் அமைதியடையும். பண்டரீபுர விட்டல் ரகுமாயியை சேவித்த அதே ஈடு இணையற்ற மகிழ்ச்சியை அவர்கள் பெற்றார்கள். இது மிகையாகாது. இது போன்ற ஓர் அடியவர் சொல்வதை எண்ணுங்கள்.

**கௌலிபுவாவின் பிரகடனம்**

ஏறக்குறைய தொண்ணூற்றைந்து வயதுடைய கௌலிபுவா என்னும் ஒரு பக்தர் பண்டரீபுரத்துக்கு வருடந்தோறும் சென்று வருபவர். அவர் பண்டரீபுரத்தில் எட்டு மாதங்கள் தங்கினார். கங்கைக்கரையில் (ஜூலை முதல் நவம்பர் வரை) ஆஷாட மாதத்திலிருந்து கார்த்திகை வரை நான்கு மாதங்கள் தங்கினார். மூட்டைகளைச் சுமப்பதற்காக ஒரு கழுதையைத் தன்னுடனும் ஒரு சீடனைத் துணைவனாகவும் வைத்,திருந்தார். ஒவ்வோர் ஆண்டும் தனது பண்டரீபுர விஜயத்தைச் செய்துவிட்டு சீர்டிக்கு, தான் மிகவும் அன்பு செலுத்திய ஸாயிபாபாவைப் பார்க்க வருவார். அவர் பாபாவை உற்றுநோக்கி இவ்வாறாகக் கூறுவது வழக்கம் : "இவரே ஏழைகளிடத்தும், தீனர்களிடத்தும் கருணை காட்டும் கடவுளான பண்டரிநாத விட்டலின் அவதாரமாவார்." கௌலிபுவா, விட்டலின் முதிய அடியவர். பண்டரிக்கு அநேக முறை விஜயம் செய்தார். ஸாயிபாபா பண்டரிநாதரே என்பதைப் பிரகடனம் செய்தார்.

**விட்டல் தாமே தோன்றினார்**

இறைவனது நாமத்தை நினைத்துக் கொண்டிருத்தலிலும், பாடுதலிலும் ஸாயிபாபா மிகவும் விருப்பமுள்ளவர். அவர் எப்போதும் "அல்லா மாலிக்" (இறைவனே எஜமானன்) மற்றும் தமது முன்னிலையில் மற்றவர்களை கடவுளது நாமத்தை இரவும், பகலும் தொடர்ந்து ஏழு நாட்கள் பாடும்படி செய்தார். இதற்கு நாம ஸப்தம் என்று பெயர். ஒருமுறை அவர் தாஸ்கணு மஹாராஜை "நாம ஸப்தம்" செய்யும்படி சொன்னார். ஏழாவது நாளின் முடிவில் விட்டல் பிரசன்னமாவதற்கு உறுதியளித்தால் தான் அதைச் செய்வதாக அவர் கூறினார். அதற்கு பாபா தமது நெஞ்சின் மேல் கையை வைத்து நிச்சயம் விட்டல் பிரசன்னம் ஆவார் என உறுதியளித்து, "ஆனால் அந்த பக்தன் ஊக்கமுடையவனாகவும்,

பக்தியுடையவனாகவும் இருக்க வேண்டும்" என்று கூறினார். டாகூர்நாத்தின் டங்கபுரி (தகூர்), விட்டலின் பண்டரி, ரண்சோடின் (கிருஷ்ணனின்) துவாரகை எல்லாம் இங்கே (சீர்டியில்) இருக்கின்றன. துவாரகையைப் பார்க்க எவரும் வெகுதூரம் செல்ல வேண்டியதில்லை. இவ்வாறாக அன்பாலும், பக்தியாலும் பக்தன் பொங்கிக் கொண்டிருக்கும்போதுதான் விட்டல் தாமே இங்கு (சீர்டியில்) பிரசன்னமாவார். ஸப்தம் பூர்த்தியானதும் விட்டல் கீழ்கண்ட விதமாகப் பிரசன்னமாகவே செய்தார். வழக்கம் போல குளித்து முடித்தபின் காகாஸாஹேப் தீக்ஷித் தியானத்தில் அமர்ந்திருந்தார். அவர் ஒரு காட்சியில் விட்டலைக் கண்டார். மத்தியானம் பாபாவின் தரிசனத்துக்காகச் சென்றபோது பாபா ஐயமற அவரை நோக்கி, "விட்டல் பாடீல் வந்தாரா? நீர் அவரைக் கண்டீரா? அவர் விளையாட்டுப் பிள்ளை போன்றவர். அவரை உறுதியாகப் பற்றிக் கொள்ளும். இல்லாவிடில் நீர் சிறிதே கவனக் குறைவாக இருப்பினும் தப்பித்துவிடுவார்" எனக்கூறினார். இது காலையில் நிகழ்ந்தது. மத்தியானம் மற்றொரு விட்டல் தரிசனம். வெளியிலிருந்து ஒரு ஹாக்கர் 25 அல்லது 30 விட்டோபா படங்களை விற்றுக்கொண்டு வந்தான். காகாஸாஹேபின் காட்சியில் தோன்றிய உருவத்துடன் அப்படம் ஒத்து இருந்தது. இதைக் கண்டும், பாபாவின் மொழிகளை நினைவு கூர்ந்தும், காகாஸாஹேப் தீக்ஷித் ஆச்சரியப்பட்டு மகிழ்ச்சியுற்றார். ஒரு படத்தை வாங்கித் தனது பூஜை அறையில் வழிபாட்டுக்காக வைத்தார்.

**பகவந்த்ராவ் க்ஷீர்ஸாகரின் கதை**

பகவந்த்ராவ் க்ஷீர்ஸாகரின் கதை, பாபா விட்டல் வழிபாட்டில் எவ்வளவு ஆர்வமுள்ளவராக இருந்தார் என்பதை எடுத்துக் காட்டுகிறது. பகவந்த்ராவின் தந்தையார் விட்டோபாவின் பக்தர். பண்டரீபுரத்துக்கு வருடாந்திரப் பயணம் செய்யும் பழக்கமுடையவர். தமது வீட்டிலும் விட்டோபாவின் உருவம் வைத்து அவர் வழிபட்டார். அவர் இறந்தபின் அவரது மகன் வருடாந்திரப் பயணம், வழிபாடு, சிரார்த்தம் முதலியவை அனைத்தையும் நிறுத்திவிட்டார். பகவந்த்ராவ் சீர்டிக்கு வந்தபோது, பாபா அவரது தந்தையை நினைவு கூர்ந்து கூறியதாவது "அவரது தந்தை எனது சினேகிதன். எனவே நான் அவரை இங்கு இழுத்தேன். அவர் நைவேத்யம் படைக்கவே இல்லை. ஆதலால்

அவர் விட்டலையும் என்னையும் பட்டினி போட்டார். எனவே அவரை நான் இங்கு கொணர்ந்தேன். அவருடன் வாதாடி வழிபாடு செய்ய வைப்பேன்".

**தாஸ்கணுவின் பிரயாகைக் குளியல்**

கங்கையும் யமுனையும் சந்திக்கும் இடத்திலுள்ள பிரயாகை என்னும் புண்ணிய நதியில் ஸ்நானம் செய்வது மிகவும் பாக்கியமானது என்று இந்துக்கள் நினைக்கிறார்கள். ஆயிரக்கணக்கான யாத்ரீகர்கள் குறிப்பிட்ட காலங்களில் புண்ணிய ஸ்நானத்திற்காக அவ்விடம் செல்கிறார்கள். ஒருமுறை தாஸ்கணு, தான் ஸ்நானம் செய்வதற்காக பிரயாகை போக வேண்டுமென்று நினைத்தார். பாபாவிடம் அங்ஙனமே செய்வதற்கு அனுமதி வேண்டிவந்தார். பாபா அவருக்குப் பதில் சொல்லியதாவது, "அவ்வளவு தூரம் போக வேண்டிய அவசியமில்லை. நமது பிரயாகை இங்கேயே இருக்கிறது. என்னை நம்பு" என்றார். அப்போது ஆச்சர்யத்திலும் ஆச்சர்யம்! தாஸ்கணு தனது தலையை பாபாவின் அடிகளில் வைத்ததும் கங்கை, யமுனை ஆறுகளின் புனிதநீர் பாபாவின் இரண்டு காற்கட்டை விரல்களிலிருந்து ஒழுங்காக வெளிப்பட்டது. இவ்வாச்சரியத்தைக் கண்ணுற்ற தாஸ்கணு அன்பு ஆழ்ந்த மரியாதை உணர்ச்சியால் பெரிதும் கவரப்பட்டார். அவர் கண்கள் நீரால் நிறைந்தன. அந்தரங்கத்தில் அவர் உணர்ச்சியால் உந்தப்பட்டார். அவருடைய பேச்சு, பாபாவின் புகழையும் அவரின் லீலைகளையும் குறிப்பிடும் கவிதையாகப் பொங்கி வெளிப்பட்டது.

**ஸாயிபாபாவின் அயோனி ஜன்மமும் அவரின் முதல் சீர்டி விஜயமும்**

ஸாயிபாபாவின் பெற்றோர், பிறந்த இடம் இவற்றைப் பற்றி ஒருவருக்கும் தெரியாது. பல விசாரணைகள் செய்யப்பட்டன. பாபாவிடமும் மற்றவர்களிடமும் பல கேள்விகள் கேட்கப் பட்டன. ஆனால் திருப்தியான பதிலோ செய்திகளோ இதுவரை கிடைக்க வில்லை. வழக்கத்தில் இவைகளைப் பற்றி நமக்கு ஒன்றும் தெரியாது. சாதாரண மனிதர்களையொப்ப நாமதேவர், கபீர் முதலியோர் பிறக்கவில்லை. அவர்கள் சிசுக்களாக, முத்துக் களின் தாயினிடத்தில் (ஆற்றில்) காணப்பட்டார்கள். நாமதேவ் கோணாயியால் பீமரதி ஆற்றிலும் கபீர், தமால் என்பவரால் பாகீரதி

ஆற்றிலும் கண்டெடுக்கப்பட்டார்கள். ஸாயிபாபாவின் விஷயமும் அதையொத்ததாகும். பக்தர்களுக்காக ஒரு வேப்ப மரத்தடியில் 16 வயது இளைஞனாகத் தாமே முதலில் தோன்றினார். அப்போதே பிரம்ம ஞானத்தால் நிரம்பியவராகக் காணப்பட்டார். கனவிலும் இவ்வுலகப் பொருள்களின் ஆசை அவருக்கு இல்லை. மாயையை அவர் உதைத்துத் தள்ளினார். முக்தி அவர் தம் காலடியில் பணி செய்தது. சீர்டியைச் சேர்ந்தவரும் நாநாசோப்தாரின் தாயாருமாகிய ஒரு பாட்டி அவரைக் கீழ்கண்டவிதமாக வர்ணிக்கிறார். அழகும், சுறுசுறுப்பும், மிகுந்த சுந்தரமும் உடைய இவ்விளைஞன் முதலில் வேப்ப மரத்தின் அடியில் ஆசனத்தில் அமர்ந்திருந்தவாறு காணப்பட்டார். அக்கிராமத்து மக்கள், இத்தகைய இளம் வயது உடையபவன் வெப்பத்தையோ குளிரையோ பொருட்படுத்தாது அத்தகைய கடினப் பயிற்சி பழகுவதைக் கண்ணுற்ற ஆச்சரியத்தால் தாக்கப்பட்டனர். பகலில் ஒருவருடனும் பழகுவதில்லை. இரவில் ஒருவருக்கும் அஞ்சுவதில்லை. இவ்விளைஞன் எங்கிருந்து வந்தான் என்று மக்கள் ஆச்சர்யப்பட்டுக் கேட்டுக் கொண்டனர். ஒரு சாதாரண கவனிப்பே, அவன்மீது எல்லோரும் அன்பு கொள்ளும் அளவிற்கு அவனுடைய உருவாம்சங்களெல்லாம் அத்தகைய சுந்தரம் பொருந்தியதாக இருந்தது. அவன் ஒருவர் வீட்டிற்கும் செல்வதில்லை. எப்போதும் வேப்பமரத்தடியிலேயே உட்கார்ந் திருந்தான். வெளித்தோற்றத்திற்கு இளைஞனாகக் காணப் பட்டான். ஆயினும் அவன் செய்கைகள் அவன் உண்மை யிலேயே ஒரு "பரமாத்மா" என்பதை வெளியிட்டன. அவன் 'வேண்டுதல் வேண்டாமை'-யின்மையின் பருப் பொருளாகவும் அனைவருக்கும் ஓர் மர்மமாகவும் இருந்தான். ஒருநாள் 'கண்டோபா கடவுள்' ஒரு அடியவனிடம் 'சாமி' பிடித்தது. ஜனங்கள் அவரை, 'தெய்வமே இவ்விளைஞனின் தந்தை யார்? அவன் எப்போது வந்தான் என்பதை நீர் தயவு செய்து விசாரியும்' எனக் கேட்கத் துவங்கினர். கண்டோபா அவர்களை ஒரு மண் வெட்டி கொணரச் சொல்லி ஒரு குறிப்பிட்ட இடத்தை தோண்டச் சொன்னார். அங்ஙனமே தோண்டப்பட்ட போது செங்கற்கள் காணப்பட்டன. அதற்கடியில் சமதளகல் ஒன்றும் இருந்தது. இந்தக்கல் அப்புறப்படுத்தப்பட்டதும் ஒரு நிலைக் கதவு தெரிந்தது. அதில் நான்கு சமயி (விளக்குகள்)

எரிந்து கொண்டிருந்தன. அது ஒரு நிலவறைக்கு அழைத்துச் சென்றது. அதில் பசுமுக உருவத்தில் ஜபம் செய்யும் பைகள், மரப்பலகைகள், ஜபமாலைகள் முதலியவை காணப்பட்டன. கண்டோபா கடவுள் கூறியதாவது, "இவ்விளைஞன் இங்கு 12 ஆண்டுகளாகப் பயிற்சி செய்தான்". பிறகு ஜனங்கள் அவ்விளைஞனிடம் இதைப்பற்றிக் கேட்கத் துவங்கினர். அவன் அவர்களை திசைதிருப்பி, அது தன்னுடைய குருவின் இடம் என்றும் அவருடைய புனிதமான "வதன்" என்றும் அதை நன்றாகப் பாதுகாக்கும்படியும் வேண்டிக் கொண்டான். ஜனங்கள் அப்போது கதவை முன்பிருந்தபடியே மூடிவிட்டனர். அரச மரமும், அத்தி மரமும் புனிதமாய் இருப்பது போல் பாபா வேப்ப மரத்தையும் அதே அளவில் புனிதமாகக் கருதி, அதையே பெரிதும் விரும்பினார். மஹால்ஸாபதியும் மற்ற அடியவர்களும் இவ்விடத்தை பாபாவின் குருநாதனர் சமாதியடைந்த இடமாகக் கருதி ஸாஷ்டாங்க சரணம் செய்தனர்.

**மூன்று வாடாக்கள்**

வேப்பமரம் இருக்குமிடமும், அதைச் சுற்றியுள்ள இடமும் திரு. ஹரிவிநாயக் ஸாடே அவர்களால் வாங்கப்பட்டு 'ஸாடே'யின் வாடா என்ற பெயரில் ஒரு பெரும் கட்டிடமும் எழுப்பப்பட்டது. அங்கு திரண்ட புனித யாத்ரீகர்களுக்கு அது ஒன்றே தங்கும் இடமாய் இருந்தது. ஒரு "பார்" (மேடை) வேப்பமரத்தைச் சுற்றிக் கட்டப்பட்டது. தங்கும் இடமும் படிக்கட்டுகளுடன் அமைக்கப்பட்டது. படிக்கட்டுகளின் அடியில் ஒரு இருப்பிடம் இருக்கிறது. பக்தர்கள் அம்மேடையில் வடக்கு நோக்கி அமர் கிறார்கள். வியாழன், வெள்ளிக் கிழமை மாலை நேரங்களில் அங்கு வாசனைப் பொருள்களை எரிப்பவர்கள் கடவுள் கிருபையால் மகிழ்ச்சியுடன் இருப்பர். இந்த வாடா பழமையானது. உதிர்ந்து கொட்டும் தன்மை உடையதாகவும், பழுது பார்க்க வேண்டியதாகவும் இருந்தது. தற்போது தேவையுள்ள பழுது பார்க்க வேண்டியனவ்கள், சேர்க்க வேண்டியவைகள், மாறுபாடுகள் எல்லாம் ஸமஸ்தானத்தால் செய்யப்பட்டன. (2) சில ஆண்டுகளுக்குப்பின் தீக்ஷித் என்ற பம்பாய் வக்கீல் இங்கிலாந்து சென்றிருந்தார். அங்கு நேரிட்ட ஒரு விபத்தில் தனது காலை முறித்துக் கொண்டார். இக்காயம் எந்த விதத்திலும் குணப்படுத்

வழியைக் காணவில்லை. நானாஸாஹேப் சாந்தோர்கர், ஸாயிபாபாவிடம் முயற்சிக்கும்படி அறிவுறுத்தினார். எனவே அவர் 1909-இல் ஸாயிபாபாவைக் கண்டு தனது கால் ஊனத்தைவிட, தனது மன ஊனத்தை குணம் ஆக்கும்படி வேண்டிக் கொண்டார். ஸாயிபாபாவின் தரிசனத்தால் மகிழ்ச்சியுற்று சீர்டியிலேயே தங்கி விட முடிவு செய்தார். எனவே தனக்காகவும், அடியவர்களுக் காகவும் ஒரு வாடாவை எழுப்பினார். 10-12-1910இல் அக்கட்டிடத்திற்கு அஸ்திவாரம் இடப்பட்டது. இந்த நாளில் மற்ற இரு முக்கிய சம்பவங்கள் நிகழ்ந்தன. (1) திரு. தாதா ஸாஹேப் காபர்டே தனது வீடு திரும்புவதற்கு அனுமதி அளிக்கப்பட்டார். (2) சாவடியில் இரவு ஆரத்தி தொடங்கியது. இந்த வாடா கட்டி முடிக்கப்பட்டு 1911-இல் ஸ்ரீராமநவமி தினத்தில் உரிய மரியாதைகளுடனும், சம்பிரதாயங்களுடனும் பிரவேசம் செய்யப் பட்டது. (3) நாக்பூரைச் சேர்ந்த புகழ்பெற்ற லட்சாதிபதியான திரு. புட்டி அவர்களால் மற்றொரு வாடா அல்லது அரண்மனை மாளிகையும் எழுப்பப்பட்டது. ஏராளமாக பணம் இக்கட்டிடத் திற்கு செலவிடப்பட்டது. ஏனெனில், ஸாயிபாபாவின் உடல் இவ்விடத்தில்தான் அடக்கம் செய்யப்பட்டு இருக்கிறது. இது தற்போது சமாதி கோயில் (சமாதி மந்திர்) என வழங்கப்படுகிறது. இவ்விடத்தில் முன்னர் பாபா தண்ணீர்விட்டு கவனித்து வந்த ஓர் தோட்டம் இருந்தது. முன்னர் ஒன்றுமே இல்லாத இடத்தில் மூன்று வாதாக்கள் எழும்பின. இவை எல்லாவற்றிலும் ஆரம்ப காலத்தில் அனைவருக்கும் ஸாடேவின் வாடாவே நிரம்பப் பயன் பட்டது. வாமன் தாத்யாவின் உதவியுடன் ஸாயிபாபா கவனித்த தோட்டத்தின் கதை, ஸாயிபாபா சீர்டியில் தற்காலிகமாக இல்லாதிருந்து, சாந்த்பாடீலின் கல்யாண ஊர்வலத்துடன் மீண்டும் வருகை, தேவீதாஸ், ஜானகிதாஸ், கங்காகீர் இவர்களின் பழக்கம், மொஹித்தின் தாம்போலியுடன் பாபாவின் மல்யுத்தப் போட்டி, மசூதியில் இருப்பிடம், திரு. டேங்க்லே மற்ற அடியவர்களின் அன்பு மற்ற விஷயங்களும் அடுத்த அத்தியாயத்தில் விவரிக்கப்படும்.

***ஸ்ரீ ஸாயியைப் பணிக அனைவர்க்கும் சாந்தி நிலவட்டும்.***